RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22478

OPEN ACCESS

# இராவணனின் பத்து தலைகள் குறித்த தொன்மங்கள்

கு. உமாதேவி [அ, *]

[அ] நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கிய ஆய்வுகள் துறை, டெல்லி பல்கலைக்கழகம், இந்தியா.

# Myths about the Ten Heads of Ravanan

D. Uma Devi [a, *]

[a] Department of MIL & LS, University of Delhi, Delhi, India

* Corresponding Author: dumadevi@mil.du.ac.in

Received: 13-07-2022
Revised: 16-09-2022
Accepted: 30-09-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

In the Hindu mythology, the character of Ravanan stands out as one of the most complex and intriguing figures.He portrayed as the antagonist in the epic of Ramayana, Ravana is remembered not only for his formidable strength and intelligence but also for the ten heads. These ten heads, far from being a mere physical feature, carry profound symbolism and significance that delve into the depths of human nature, desires, and the struggle for self-mastery. This article explores various myths on the tenheads of ravana as well as his ten heads serve as a timeless reminder that true strength lies not in the accumulation of power and desires but in conquering the flaws. By delving into the depths of this mythological narrative,to uncover profound insights that resonate across cultures and generations, urging to the strive for a higher understanding in a scientific way.

**Keywords:** Ravanan, Mythology, Ten Heads, Ramayanam

## முன்னுரை

எண்சான் உடம்பிற்கும் தலையே பிரதானம் என்ற முன்னோர்களின் பழமொழிக்கேற்ப இராவணனின் பத்து தலைகள் அவனின் பேருக்கும் புகழுக்கும் அடிப்படையாக அமைந்தது எனலாம். .இராவணனின் தோற்றத்தில் பத்துதலைகள், கம்பீராமான முருக்கிய மீசை ஆகியவை.முக்கிய அம்சமாகும். ஆனால், இராவணனுக்கு உண்மையிலேயே பத்து தலைகள் கிடையாது என்ற குறிப்பும் உள்ளது. இராமாயணத்தில் இராவணன் பத்துத் தலைகள் கொண்டவனாக சித்தரிக்கப்படுகிறான். அவனின் பத்து தலைகள் என்பது அவனின் பத்து துறைகளில் சிறந்து விளங்கும் தன்மையை விளக்குகின்றன என்ற் கருத்தும் உண்டு..மேலும், அவன் சிறந்த வீணை வித்துவான், சிறந்த சிவபக்தன், சிறந்த வீரன் போன்ற பத்து குணாதிசயங்கள் கொண்டவன் என்றும் இராவணனின்வழிதோன்றல்கள் கூறுகின்றனர்.. இராவணனின் பத்து தலைகள் ஏதோ ஒன்றின் அடையாளமாக திகழ்கின்றதா? என்ற கருதுகோளை அடிப்படையாகக்கொண்டு இக்கட்டுரை அதனைப் பல்வேறு கண்ணோட்டங்களில் ஆய்வு செய்கிறது.

இராவணனின் உடலில் பத்து தலைகள் உடல் ரீதியாக மட்டுமே இணைக்கப்பட்டுள்ளது ஆனால் பொதுவாக இந்து புராணங்களில் ஒரு உடலில் ஒன்றுக்கும் மேற்பட்ட தலைகள் இருப்பதற்கு முக்கியமான காரணங்கள் சொல்லப்படுகின்றன. இந்து மதத்தின் பல கடவுள்களுக்கு

ஒன்றுக்கும் மேற்பட்ட தலைகளைக் காணமுடிகிறது.இராவணனுக்கும் பத்துத் தலைகள் உள்ளது.எனவே, அவனும் கடவுள் நிலையில் வைத்து நோக்கப்படுகிறான். வடமாநிலங்களில் அவன் அறிவு கடவுளாக கருதப்படுகிறான்.இராவணனுக்கு தச சீஷன் என்னும் பெயரும் இருந்தது. அதற்கு பொருள் பத்து தலைகளை உடையவன் என்று பொருள்.. இராவணனது பத்து தலைகளும் அவனுடைய ஞானத்தை குறிப்பவையாகும். இந்த பத்து தலைகளும் நான்கு வேதங்களையும், ஆறு உபநிஷதங்களையும் குறிப்பதோடு பத்து ஞானிகளின் திறமை இராவணனுக்கு இருப்பதை உணர்த்துகிறது என்ற விளக்கமும் இந்தியாவின் வட மாநிலங்களில் களஆய்வு தரவுகளின் வழி தெரியவருகிறது..அவன் அறுபத்துநான்கு வகையான அறிவு மற்றும் அனைத்து ஆயுதக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவன்.அவனது பத்து தலைகள் அவனது மேதைமையின் பன்முகத்தன்மையைக் குறிக்கிறது என்ற விளக்கங்களும் கூறப்படுகின்றன. இராவணன் ரிக், யஜூர், சாம, அதர்வணம் என்ற நான்கு வேதங்களையும், வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், ப்ரபாகரம், பூர்வமீமாம்சை, உத்தர மீமாம்சை என்ற ஆறு சாஸ்திரங்களையும் அறிந்தவன் என்பதை விளக்கவே பத்து தலைகளுடன் அவன் படைக்கப்பட்டுள்ளான்.. இராவணனின் பத்து கலைகளை கொண்டவன் என்பதே மருவி பத்து தலைகள் கொண்டவன் ஆகி விட்டது என்று தென்னிந்தியாவில் கூறுவர்.

இராவணன் பாதி பிராமணனும், பாதி ராட்சசனும் ஆவான். அதனால்தான் இராவணன் பிரம்மராட்சசன் என்று அழைக்கப்பட்டாரன்.அவரன் அசுரர்களின் அரசனாக இருந்தமையால் பத்து தலைகள் மற்றும் இருபது கைகளுடன் சித்தரிக்கப்படுகிறான், அவனுக்கு "தசமுக"(பத்து முகம்) அல்லது "தசக்ரீவா" பத்து தலை) என்ற பெயரை வழங்கினார்கள். இராவணனின் பத்து தலைகளுக்கான காரணம் குறித்து ஒரு எதிர்மறை விளக்கமும் உள்ளது. மனிதனின் பத்து உணர்வுகளான காம் (காமம்),க்ரோதா (கோபம்),மோஹா (மாயை), லோபா(பேராசை), மாடா (பெருமை), மாத்ஸர்யா (பொறாமை),மனஸ் (மனம்),புத்தி (புத்தி),சித்த (வில்), மற்றும் அஹம்காரா (ஈகோ) ஆகியவவை அவனின் வளர்ச்சிக்குத் தடையாக விளங்கும் என்றும் இந்த ஒன்பது உணர்ச்சிகளைத் தவிர்க்கவும், இவற்றின் அனைத்து அம்சங்களையும் சமமான நிலையில் கையாளவும், இராவணனனை நியாயப்படுத்தும் புத்திசாலித்தனத்தை மட்டும் வைத்துக்கொள்ளவும் மகாபலி அறிவுறுத்தினார். ஆனால் மேற்கூறிய பத்து உணர்வுகளும் அவனுடையச் செயல்களைக் கட்டுப்படுத்தின. இராவணன் தன் உணர்வுகளுக்கு அடிமையாகி, தனது ஆசைகளை கட்டுப்படுத்த முடியாததால், அவன் தன்னையும் தனது குலத்தையும் அழித்தது மட்டுமல்லாமல் முழு இலங்கையையும் சாம்பலாகிவிட்டான் என்பர்.மேலும், இலங்கையை சிறப்பாக அரசாண்ட அரசனான இராவணன் பத்து நாடுகளுக்கு அரசனாக முடி சூடப்பட்டான், இதனால் அவன் தசகிரிவன் என்று அழைக்கப்பட்டான். இராமாயணத்தில் கூறுவது போல இவனுக்கு பத்து தலைகள் இல்லை, பத்து கிரீடங்கள் தான் இருந்தன என்று தகவலாளி ஒருவர் குறிப்பிட்டார்.

இராவணன் சிறந்த இசைக்கலைஞனாகவும் சிறந்த வீணை வாசிப்பாளனாகவும் இருந்தான். அவன் ஆறு சாஸ்திரங்கள் நான்கு வேதங்கள் (சதுர்வேதங்கள்) ஆகியவற்றில் சிறந்த ஆற்றல் பெற்றவன். இராவணன் அறுபத்துநான்கு வகையான அறிவு மற்றும் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவன். அவன் மிகவும் கற்றறிந்த பிராமணன் மற்றும் தவத்தின் மூலம் சிறந்த அதிகாரம் பெற்றவன், இதன் மூலம் அவன் "பிரம்மா" என்ற பட்டத்தை பெற்றான். எனவே "இராவணபிரம்மா" என்றும் அழைக்கப்பட்டான். அவன் ஒரு சிறந்த போர்வீரனாக இருந்தான், அவனுக்கு எதிராக யாரும் போராட முடியாது. அவனின் இத்தகைய சிறப்பினை மிகைபடுதிக் கூறுவதற்கு படைப்பாளர் வால்மீகி பத்து தலைகள் கொண்டவனாக இராவணனைப் படைத்தார் என்றும் கூறுகின்றனர். ஒருமுறை இராவணன் சிவபெருமானை மகிழ்விப்பதற்காக 'யாகம் செய்தான் . சிவபெருமானை

மேலும் திருப்திப்படுத்த அவன் தலையை வெட்டிக் கொண்டான், ஆனால் ஆச்சரியப்படும் விதமாக அவனது தலை மீண்டும் வந்தது. சிவபெருமான் அவனது தவத்திற்கு மகிழ்ந்து பத்து தலைகள் மற்றும் இருபது கைகளை அவனுக்கு வழங்கினார் .அவன் விரும்பும் போது அவை தோன்றும் எனவே இராவணன் தசமுக (பத்து முகம்) அல்லது தசகாந்த (பத்து தொண்டை) தசக்ரீவன் (பத்து தலை) என்றும் அழைக்கப்படுகிறான். இவ்வாறு இராவணனின் பத்து தலைகளைப் பற்றி பல்வேறு கதைகள் உள்ளன.

வால்மீகி ராமாயணத்தின் படி, இராவணன் பத்து நெற்றிகள், பெரிய மோலார், செம்பு போன்ற உதடுகள் மற்றும் இருபது கைகளுடன் பிறந்தான். அவர் நிலக்கரியைப் போல கறுப்பாக இருந்தான், அவனுடைய பத்து கிரஹங்களின் காரணமாக, அவனது தந்தை அவருக்கு தாஸ்கிரீவா என்று பெயரிட்டார்.இந்தக் காரணத்திற்காக இராவணன் தசன்னன், தசானன், தசகந்தன் போன்ற பெயர்களால் பிரபலமானவன். இராவணனின் பத்து தலைகள் குறித்தத் தொன்மங்கள் பிரம்மாவுடன் இணைத்தும் கூறப்படுகிறது. இராவணன் பல ஆண்டுகளாக பிரம்மாவிடம் தீவிர தவம் செய்தான். பிரம்மாவை மகிழ்விப்பதற்காக இராவணன் தனது தவத்தின் போது பத்து முறை தலையை வெட்டினான். அவன் தலையை வெட்டும் ஒவ்வொரு முறையும் ஒரு புதிய தலை தோன்றும். இதனால் அவனால் தவத்தை தொடர முடிந்தது. இறுதியில், பிரம்மா இராவணனின் தவம் கண்டு மகிழ்ந்து, பத்தாவது முறை தலையை வெட்டிய பின் தோன்றி, வரம் கேட்கச் சொன்னார். இராவணன் என்றும் அழியாத,இறவாத வரத்தை விரும்பினான், ஆனால் பிரம்மா அதை மறுத்து, அமிர்தத்தை வழங்கினார், இது அவருடைய தொப்புளின் கீழ் சேமிக்கப்பட்டது..இவ்வாறு அவனின் பத்து தலைகள் உருவான காரணங்கள் சொல்லப்படுகின்றன.அவனது மன வலிமை ஒரு சாதாரண மனிதனின் மன வலிமையை விட பத்து மடங்கு அதிகமாக இருந்தது என்றும் அதனால் பத்து தலை கொண்டவனாக அவன் உருவாக்கப்பட்டான் என்று கம்பராமாயணம் கூறுகிறது. சில ஆய்வாளர்கள் கூறுகையில் இந்து சாஸ்திரங்களைப் பயின்று ,இராவணன் பத்து தலைகள் கொண்ட ஒரு மாயையை உருவாக்கினான் என்றும் உண்மையில், அவன் ஒற்றைத் தலையை மட்டுமே கொண்டு இருந்தான்.அவனின் மந்திரச் செயல்களினால் பத்து தலைகள் கொண்ட ஒரு மாயையை உருவாக்கி தனது எதிரிகளை முட்டாளாக்கினான் என்றும் விளங்கங்கள் சொல்லப்படுகிறன. மேலும், இராமசரித்திர மானஸின் கூற்றுப்படி, அரக்கர்கள் மாயையின் எஜமானர்கள். மாரிச் என்ற அரக்கனின் தங்க மான், வெள்ளி நட்சத்திரம் போன்ற ஒரு மாயையை உருவாக்கினர் இராவணனின் மந்திர சித்து விளையாட்டே அவனுக்கு பத்து தலைகளையும் இருபது கைகளையும் உருவாக்கியது. அது மட்டுமன்றி அவனின் பெற்றோர்கள் உதவியினால் பத்து தலைகள் பெற்றான் என்றும் செவி வழி செய்திகள் கூறுகின்றன.இராவணனின் தந்தை வைச்ரவ முனிவர் பல அம்சங்கள் நிறைந்த அணிகலன் ஒன்றை சூட்டினார். அதை அணியும் போது, அந்த ஒளியின் எதிரொளியாக பத்து தலைகள் உள்ளது போல பிரதிபலிக்கும் தன்மையில் அது வடிவமைக்கப்பட்டு இருந்தது.இராவணனுக்கு எண்ணற்ற தலைகள் இருக்கிறது என்பதற்கும் இதுவும் ஒரு காரணம் என்றும் கூறப்படுகிறது. இதைப் போன்று மற்றொரு கதை வடிவமும் உள்ளது.இராவணனுக்கு ஒரே ஒரு தலைதான் இருக்கிறது, அவனது தாயார் ஒன்பது முத்துகளை பதித்த, மிகவும் உயர்தர மாலையை அவனுக்குப் பரிசாக கொடுத்தார். அதை இராவணன் அணியும்போது அந்த முத்து மாலையில் இராவணனின் உருவம் ஒன்பது உருவங்களாக காட்சி தரும், அதை நினைவு கூறும் வகையில் இராவணனுக்கு மொத்தம் பத்து தலைகள் என்றும் கூறப்பட்டது. இராவணனுக்கு தலை ஒன்றே என்றும், பத்து தலைகள் என்பது இராவணனின் நல்ல, தீய குணங்களையும் மற்றும் சக்திகளையும் குறிப்பவையாகும் என்ற விளக்கமும் உண்டு. இராவணனுக்கு பத்து தலைகள் இல்லை என்றும் அது அவனுடைய பல்வேறு கலை அறிவின் குறியீடு என்றும் அதன்

அடிப்படையிலேயே அவனுக்குப் பத்து தலைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது போன்ற புராணக் கதைகள் இராமனின் இருப்பை உறுதி செய்வதற்காக என்று கூறுவதில் தவறில்லை.பத்து தலைகள் கொண்ட ஒரு மனிதன் உலகில் இருக்க வாய்ப்பில்லை.மேலும், பத்து தலைகள் உடைய இராவணன் உலகத்தில் இருந்தான் என்றால் அது வால்மிகியின் கற்பனையான புனைவு கதை என்று பொருளாகிவிடும். எனவே இராவணன் என்பவன் ஒரு தலையுடன் தான் இருந்தான் என்றும் அவனுடைய திறமைகள் பத்து தலைகள் கொண்டவனாக குறியீட்டு அடிப்பையில் காட்டப்பட்டன என்ற தொன்மங்கள் உருவாக்கப்பட்டன. இராவணனுக்கு ஒரு தலை உண்டு ஒரு என்ற தொன்மங்கள் வழி இராமனின் இருத்தல் உறுதி செய்யப்படுகிறது. ஆனால், இராவணன் கிருஷ்ண பட்ச அமாவாசை அன்று இராமனுடன் போருக்குச் சென்றான், மேலும் போரின் போது, அவன் ஒவ்வொரு நாளும் ஒரு தலையை இழந்தான் என்றும் விஜயதசமி அன்று கொண்டாடப்படும் தசமியில், அவன் தனது பத்தாவது அதாவது கடைசித் தலையை இழந்தான் என்று இராமாயணம் கூறுகிறது. இதனால் இராவணன் பத்து தலைகள் கொண்ட ஒரு கதாபாத்திரமாக உருவாக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. இராவணணின் பத்து தலைகள் குறித்த தொன்மங்களில் அவனது பிறப்பு குறித்தத் தொன்மங்களும் அடங்கும்.அது பின்வருமாறு கூறுகிறது.

சுமாலி" என்ற அசுரன் தன் மகளான "கைகனி" என்பவளிடம் தனது ஆசையைக் கூறி அசுரகுலம் தழைக்க நீ விச்ரவசு முனிவரை மணந்துகொண்டு குபேரன் போல் ஒருவனை குழந்தையாக பெற்றுக்கொள்ள வேண்டும் என வேண்டினான். கைகனியும் இதற்கு சம்மதித்து விச்ரவசு முனிவரை சந்திக்கக் காட்டிலுள்ள அவரது குடிசைக்குச் சென்றாள். அசுர குலத்தைச் சேர்ந்த பேரழகு பதுமையான கைகனியை கண்டதும் முனிவர் அவளை விரும்பினார். உடனே கைகனி முனிவரை தன்னுடன் உடலுறவு கொள்ள அழைத்தாள். 'இது அந்திக் கருக்கல் நேரம் இந்நேரத்தில் யார் ஒருவர் உறவுகொள்கிறார்களோ அவருக்கு விகாரமான குழந்தை பிறக்கும், குழந்தை குறையுள்ளதாகவும் இருக்கும் எனவே இரவு வரை காத்திரு என கூறி அவளது வேண்டுகோளை மறுத்தார். முனிவர் ஏதோ சதி செய்து தனது மனதை மாற்ற நினைக்கிறார் என்று சந்தேகம் கொண்டு கைகனி அவரை மயக்கி உடலுறவு கொண்டாள். பத்துமாதங்களுக்குப் பிறகு பத்து தலைகள், இருபது கைகள், பெரிய விழிகளுடன் முனிவர் சொன்னதுபோல ஒரு குழந்தை கைகனிக்கு பிறந்தது. குழந்தையைக் கண்ட அவள் அதனைத் தூக்கிக்கொண்டு முனிவரைத்தேடி ஓடினாள். தான் செய்த தவறை மன்னித்து தவவலிமையை பயன்படுத்தி குழந்தையை மீட்க கெஞ்சினாள். முனிவர், அது இயலாத காரியம் வேண்டுமென்றால் அவனை அழகாக மாற்றுகிறேன் என்று கூறி பத்து முகத்தையும் அழகாக்கினார். மேலும் இவன் வலிமை நிறைந்தவனாகவும், யாரும் வெல்லமுடியாதவனாகவும் விளங்குவான் என்றும் கூறி "தசக்கிரீவன்" (தசம் என்றால் பத்து, கிரீவம் என்றால் கழுத்து) செல்லமாக தசமுகன் என பெயர் வைத்து அந்த குழந்தையை ஆசிர்வதித்தார்.இதனால் இராவணன் பத்து தலையுடன் இருந்தான் என்றும் கூறப்படுகிறது.

இராம - இராவணன் போரில் ஆணவத்துடன் நிமிர்ந்து நின்ற இராவணனது தலையை இராமன் அறுத்தான். அது கடலில் போய் விழுந்தது. என்றாலும் அந்தத் தலை மீண்டும் முளைத்தது. இராமனை திட்டி அதட்டியது. இருந்தபோதிலும்,இராமன் ஓய்வின்றி கைவிசையைச் செலுத்தி, இராவணனின் தலைகளை அறுத்தான். என்றாலும் அவை மீண்டும் மீண்டும் முனளத்தன என்று இராவண வதத்தினை கம்பர் வருணிக்கிறார். தெய்வ அவதாரமான இராமன் ஒரே அம்பில் இராவணனை வதம் செய்து கொல்லாமல், எதற்காக போரின் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு தலையாக வெட்டி எடுத்தார் என்பதும் ஆய்வுக்குறியது. இராவணனுக்கு பத்து தலை இருந்ததாகவும், இராமருடன் நடந்த போரில் தினம் ஒரு தலை என இராவணன் இழந்ததாகவும்,

பத்தாவது நாள் போரின் போது உயிர் விட்டான். இராம - இராவணன் போர் நடந்து, இராவணன் தனது பத்தாவது தலையை இழந்து, வதம் செய்யப்பட்ட நாளே தசரா என்று இந்தியாவின் சில பகுதிகளில் கொண்டாடப்படுகிறது. தெய்வ அவதாரமான இராமன் பெருமையை விளக்க பத்து தலை கொண்ட ஒரு எதிர்கதாநாயகனாக வால்மீகி இராவணனைப் படைத்தார் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முதன் முறையாக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு அதிகாரிகள் பத்து தலைகளைக் கொண்ட இராவணன் சிலையைக் கண்டறிந்து தற்போதுதான் மீட்டுள்ளனர். இந்தச் சிலையை தொல்லியல் துறை நிபுணர்கள் அதிசிறப்பு மிக்க சிலை எனவும் குறிப்பிட்டுள்ளனர். இதன் தொன்மை மட்டுமல்ல; அதன் வடிவமைப்பும் தான் காரணம் எனறும் குறிப்பிட்டுள்ளனர். தற்போது மீட்கப்பட்டிருக்கும் பல கோடி ரூபாய் மதிப்புக்கொண்ட சுமார் ஒரு அடி (27 செ.மீ) உயர உலோக சிலையின் முன்பகுதியில் 10 தலை கொண்ட இராவணனின் உருவமும் பின்புறம், அதாவது பத்துத்தலைகளில் உள்ள மூளைப்பகுதியில் சீதை தூங்கிக் கொண்டிருப்பது போலவும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது "தனது சிந்தையெல்லாம் சீதையை ஏற்றிவைத்த இராவணனின் தீராக்காதலை, 'பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே இராவணனின் பத்துத் தலைகளிலும் சீதை நிறைந்திருப்பது போல'" சிற்பமாக வடித்திருக்கிறார்கள். "ஒற்றைத்தலையில் அல்ல, பத்துத் தலைகளிலும் சீதை மட்டுமே நிறைந்திருக்கிறார்" என இராவணனே சொல்வதுபோலத் தோன்றும் இந்தச் சிலையை ஆராய்ச்சி செய்த தொல்லியல் துறை ஆய்வாளர்கள், பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே உயிரோட்டத்துடன் செய்யப்பட்ட இந்த சிலை வட இந்திய பகுதிகளிலுள்ள இராவணன் கோவில்களிலிருந்து கடத்தப்பட்டதா? அல்லது இலங்கையில் உள்ள இராவணன் கோவிலில் இருந்து கடத்தப்பட்டதா? என்பது குறித்தும், இந்தச் சிலையின் சரியான வயது என்ன? என்பது குறித்தும் ஆராய்ச்சிச் செய்து வருகின்றனர்.

இராவணனைப் போன்று ஒரே உடலில் பலதலைகள் கொண்ட பல கடவுள்கள் உள்ளனர். ஆனால் அவர்கள் எதிர்நிலையாக கட்டமைக்கப்படவில்லை.அவர்கள் மிக உயர்ந்தவர்களாக போற்றப்படுகின்றனர். சான்றாக,முருகப் பெருமானுக்கு ஒரே உடலில் ஆறு தலைகள் உள்ளதால் அவரை ஆறுமுகன் என பக்தர்கள் அழைக்கிறார்கள். அதே பிரம்மனுக்கு நான்கு தலைகளும், சிவனுக்கு ஆறு முகங்களும் இருப்பதாக புராணங்கள் சொல்கின்றன.கடவுள்கள் தங்களின் பக்தர்களை காப்பதற்காக பல தலைகள் கொண்டிருந்தார்கள்.இந்து மதத்தில் பல தலைகள் மற்றும் கைகள் கொண்ட கடவுள்களின் சித்திரிப்பு அவர்களின் தெய்வீக சக்தியையும் மனித வடிவத்தின் வரம்புகளுக்கு அப்பாற்பட்ட ஆற்றலையும் குறிக்கின்றது. இந்த உருவங்கள் தெய்வீகத்தின் பல்வேறு அம்சங்களின் உருவகப் பிரதிநிதித்துவங்கள், எல்லையற்ற ஆற்றல்களை நினைவூட்டுகின்றன. பகவத் கீதையில், கிருஷ்ணர் மனித புரிதலுக்கு அப்பாற்பட்ட தெய்வீகத்தின் அசாதாரண தன்மையை வலியுறுத்துகிறார். அதில் பல தலைகள் கடவுள்களின் அனைத்தையும் அறிந்த இயல்பைக் குறிக்கின்றன, அதே நேரத்தில் எண்ணற்ற பணிகளை ஒரே நேரத்தில் நிறைவேற்றும் திறனைப் பெற்றிருப்பதை பல தலைகள் குறிக்கின்றன. இந்தச் சித்திரிப்புகளைப் பிரதிபலிப்பதன் மூலம், பக்தர்களும் அவர்கள் தங்களுக்குள் இருக்கும் எல்லையற்ற ஆற்றல் மற்றும் தெய்வீகப் பண்புகளை உணர்கிறார்கள்.

இதே போன்ற தன்மைகொண்ட லேர்னியன் ஹைட்ரா (Lernaean Hydra) என்ற ஒரு உயிரி கிரேக்கத் தொன்மவியலிலும் ரோமத் தொன்மவியலிலும் காணப்படுகிறது. ஒன்பது தலைகளில் நடுவில் காணப்பட்ட தலை ஒருபோதும் அழியாத ஆற்றலைக் (Immortal) கொண்டிருந்தது. மிகப் பழமையான ஹைட்ரா கதை ஹெஸியோடின் தியோகோனியில் காணப்படுகின்றன. இந்த

ஆதாரங்களிலும், ஹைட்ரா புராணத்தின் கருக்கள் ஏற்கனவே உள்ளன. கிரேக்க புராணங்களில், பல தலைகளைக் கொண்ட நச்சு நீர்ப்பாம்பு, அதன் தலை துண்டிக்கப்படும்போது பெருகியது. அரை பெண் மற்றும் அரை பாம்பு எச்சிட்னா மற்றும் நூறு தலைகள் கொண்ட டைஃபோனின் பல சந்ததிகளில் ஒன்றான லெர்னியன் ஹைட்ரா, சதுப்பு நிலங்களில் வாழ்ந்த பல தலை பாம்பு. ஹைட்ராவின் தலை ஒன்று ஆயுதங்களால் வெட்டப்பட முடியாததாக இருந்தது. அதன் மற்ற தலைகள் வெட்டப்பட்டால், ஒன்று அல்லது இரண்டு அதன் இடத்தில் மீண்டும் வளரும். ஹைட்ராவின் மூச்சு கொடிய விஷம் கொண்டதாக இருந்தது. ஹைட்ரா கிராமப்புறங்களில் உள்ள விலங்குகளையும் மக்களையும் விழுங்கியது. ஹெர்குலிஸ் ஹைட்ராவின் அதன் ஒவ்வொரு தலையினை வெட்டியவுடன் அதனை கிழிப்பதற்கு அயோலாஸ் உதவி செய்தார். ஆயுதங்கள் ஊடுருவ முடியாத தலை மட்டும் எஞ்சியிருந்தபோது, ஹெர்குலிஸ் அதைக் கிழித்து மண்ணில் புதைத்தார் என்று கூறப்படுகிறது. இங்கு கிரேக்க கடவுள்களால் பலதலைகள் கொண்ட உயிரினம் அழிக்கப்பட்டது.

இந்தத் தன்மையுடன் வேத காலங்களில், வ்ரித்ரா என்ற ஒரு அசுரன் இருந்தான்.இவன் ஒரு பாம்புபோன்ற அமைப்பினைக் கொண்டிருந்தான். இவன் இந்திரனின் எதிரியாக கருதப்பட்டான். வ்த்ரா வேதங்களில் அஹி ("பாம்பு") என்று அழைக்கப்பட்டது, மேலும் அதற்கு மூன்று தலைகள் இருந்ததாகவும் கூறப்படுகிறது. இந்த அசுரனும் இந்திரனால் கொல்லப்பட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன.

இதே போன்ற, ஹைட்ரா என்ற உயிரினம் இன்றும் காணபடுகின்றது.இந்த ஜெல்லி மீன் பாலிப்களைப் போல காணப்படும் . இதற்கு குழாய் போன்ற உடல் உள்ளது. பல கூடாரம் போன்ற வளையமான வாயும் பிசுபிசுப்பான காலும் இருக்கிறது. நன்னீர் இருக்கும் குளம் அல்லது ஆறுகளில் வசிக்கும் இவை மிக எளிதான வாழ்க்கையை வாழ்கின்றன. ஒரே இடத்தில் நிலையாக இருந்து தனது கொட்டும் நீட்சிகள் மூலம் இரையை பிடிக்க முயற்சி செய்கின்றன.1990களில் டேனியல் மார்டினஸ் என்பவர் ஹைட்ராக்களை கண்டறிந்தார். ஹைட்ராக்கள் முதிர்ச்சி அடைவதே இல்லை. அவற்றின் செல்கள் எத்தனை முறை வேண்டுமானாலும் தன்னை புதுப்பித்துக்கொள்ளும் தன்மை கொண்டவை. போச்சோ என்ற ஜீன்கள் தான் இவை இளமையாகவே இருக்க காரணம். இந்த ஜீன்கள் புழுக்கள் முதல் மனிதர்கள் வரை அனைத்து உயிர்களிலும் இருக்கின்றன. ஹைட்ராவின் ஸ்டெம் செல்களில் போச்சோ என்ற ஜீன்கள் அதிகமாக வெளிப்படுவதால் அவை மரணிப்பதில்லை. இந்த ஜீன்களை நீக்கினால் ஹைட்ராக்கள் முதிர்வடையும் என்பது சோதனை மூலம் நிறுவிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் ஹைட்ராகளுக்கு மூளை போன்ற உள்ளுறுப்புகள் கிடையாது. ஒரே நிலையான இடத்தில் வாழ்க்கை. யாராவது வெட்டிப் போட்டால் கூட திரும்ப வந்துவிடலாம். ஹைட்ரோ செல்கள் மீண்டும் உறுப்புகளை உருவாக்க வல்லது.. சுற்று சூழலே கொன்றால் மட்டுமே அவற்றிற்கு இறப்பு ஏற்படும்.இந்த உயிரினத்தின் தன்மைகள் இராவணனின் கதாபாத்திரத்தின் தன்மையுடன் மிகவும் ஒத்து போகின்றன.

## முடிவுரை

இராவணனுக்கு பத்து தலைகள் இருப்பதாக எவ்வாறு வால்மீகி கற்பனை செய்தார்? எப்படி அந்த கற்பனை அவருக்கு வந்தது? அவர் இந்தச் சிந்தனையை எங்கிருந்து பெற்றார்? போன்ற கேள்விகளுக்கு விடை காணும் நோக்கில் இராவணனுடைய பத்து தலைகள் குறித்த பல்வேறு தொன்மங்களையும் விளக்கங்களையும் மக்களிடம் கள ஆய்வின் வழி பல்வேறு தரவுகள் சேகரிக்கப்பட்டன. அவற்றில் பல இராவணனுடைய அறிவுதான் பத்து தலைகளாகக் குறியீட்டு

அடிப்படையில் கூறப்பட்டதாகவும் நவீன சிந்தனையின் அடிப்படையில் விளக்கங்கள் கிடைத்தன. ஆனால் ஒரு படைப்பாளர் தனது படைப்பின் கருவையும் அது சார்ந்த தரவுகளையும் எங்கிருந்து எடுத்துக் கொள்வார்? என்று உற்று நோக்கினால்,மனிதன் பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என்று கூறுவதிலிருந்து பெரும்பாலான மனிதனுடைய அறிவானது இயற்கையில் இருந்தே பெறப்பட்டது என்பது தெளிவாகிறது. தன்னுடைய சுற்றுச்சூழல் இருந்தே மனிதன் அதிகஅறிவுசார் உத்திகளைப் பெற்று தனதாக்கிக்கொண்டு கொண்டான். அந்த அடிப்படையில் வால்மிகி படைத்த இராவணன் போன்ற இயல்பு கொண்ட ஹைட்ரா என்ற உயிரினம் தற்போதும் உள்ளது. இந்தியாவின் பெரும்பாலான தொன்மங்கள் அனைத்தும் கிரேக்க ரோம தொன்மங்களின் தாக்கத்தினால் பெறப்பட்டதாக ஒரு கருத்தும் நிலவுகிறது ஆனால் பத்து தலைகள் குறித்த சிந்தனை அவருக்கு எப்படி தோன்றியிருக்கும் ஏன் தோன்றியிருக்கும் என்ற அடிப்படையில் ஆய்வை மேற்கொண்டபோது ஹைட்ரா என்ற நுண்ணுயிரி குறித்த சில தரவுகள் கிடைத்தன. அந்த ஹைட்ராவும் இராவணன் தலை போன்றே வெட்ட வெட்ட வளரக்கூடிய தன்மையுடன் காணப்படுகிறது. எப்போதுமே அழிவில்லாத தன்மையும் கொண்டுள்ளது. ஹைட்ராவின் ஸ்டெம் செல்களில் போச்சோ என்ற ஜீன்கள் அதிகமாக வெளிப்படுவதால் அவை மரணிப்பதில்லை. அதே போல் இராவணனுடைய உயிர் அமிர்தமாக பிரம்மாவால் அவனின்தொப்புளில் வைக்கப்பட்டு இருந்தது. அவனுக்கு அழிவில்லாத வாழ்க்கை இருந்தது.அதனால் இராவணனுடைய தலையை ராமனும் எத்தனை முறை சிதறடித்தாலும் அவனுடைய தலைகள் திரும்பத் திரும்ப வந்து ஒட்டுவதான கற்பனையை வால்மீகி கூறியிருப்பது இந்த ஹைட்ரோ என்ற உயிரினத்தின் வாழ்வியலோடு பொருந்தி அமைகிறது என்று கருத இடமுண்டு. ஹைட்ரா என்ற உயிரினந்தின் இயல்பும் இராவணனுடைய தொன்மங்களின் இயல்புகளும் உள்ள தொடர்பும் ஒன்றாகப் பொருந்தி செல்கிறது..வால்மியினுடைய இராவணனின் பத்து தலைகள் குறித்த இந்தச் சிந்தனைக்கு அடிப்படையாக இயற்கை உயிரிகளிடம் இருந்து பெறப்பட்ட ஒரு அறிவே என்பது இக்கட்டுரையின் வாயிலாக உறுதியாகிறது.

## References


Anand Neelakantan.Asura:Tale Of The Vanquished:The Story of Ravana and His People . platinum press, 2015.

Gaurav Kataria..Ravana- A Mistaken King, An Unmistaken Leader.SB Authors, 2020.

Indira Goswami And Manjeet Baruah ,(ed).Ravana (Myths, Legends and Lore).B.R. Publishing Corporation,2009.

Potluri Rao In Seattle.Did Ravana in the Valmiki Ramayana have ten heads?,2018.

Prathmesh Patil,(Trans)..Ravan the king of rakshasas.New era publishing House, 2019.

Purnalingam Pillai,K.S..Ravana The Great: King of Lanka Unknown Binding. Gyan Publishing House , 2020.

Radha Viswanath.Ravanaleela.Ruba publication, 2017.

The Valmiki Ramayana Aranya Kanda - Sarga 32 Vol. 3 India Penguin Classics,/2010.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License